# ராவ் லஞ்சம் பெற்ருர்; 4 நாட்களில் நிருபிப்பேன்


விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 12 இதழ் 131

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26 — 06 — 1993


## - மேத்தா

(மணிலா)

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மீது சுமத்தப் பட்ட லஞ்ச ஊழல் குற்றச் சாட்டை தான் நான்கு நாட் களுக்குள் நிருபிப்பதாக ஹர் ஷத் மேத்தா தெரிவித்துள் ளார். கூட்டு நாடாளுமன்றக்குழு

(4-ம் பக்கம் பார்க்க)

## ராவை பதவி விலகக் கோரி புதுடில்லியில் ஆர்ப்பாட்டம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் பதவி விலக வேண்டுமென கோரி புதுடில் லியில் ஜனதாதள் கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வ லம் ஒன்றை நடத்தினர்.

(3-ம் பக்கம் பார்க்க)

## சோனியாவை அரசியலுக்கு கொண்டுவர முயற்சி

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தியை அரசியலுக்கு கொண்டு வரும் முயற்சிகள் இடம்பெற்று வரு கின்றன.

(4ம் பக்கம் பார்க்க)

# பிரிகேடியர் ஆனந்தவீரசேகரா புலிகளுடன் பேச்சு நடத்த இன்று மீண்டும் யாழ். வருகிருர்

(யாழ்ப்பாணம்)

ஜனுதிபதி டி. பி. விஜேதுங்கவின் விசேட தூதுவரான பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா விடுதலைப் புலிகளுடன் முக்கிய மான பேச்சுவார்த்தையை நடாத்துவதற்காக இன்று மீண்டும் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளதாக தெரியவருகிறது.

பிரிகேடியர் ஆனந்த வீர சேகராவுடன் யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகரும் இன்று காலை விசேட விமானமூலம் பலாலிக்கு வந்து அங்கிருந்து காரி கேசன்துறை ஊடாக பருத்தித்துறைக்கு காலை 7.30 மணிக்கு வந்து யாழ்ப்பாணம் வருவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பிரிகேடியர் ஆனந்த வீர சேகரா யாழ் வந்து சேர்ந்ததும் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து முக்கியமான பேச்சுவார்த்தை யொன்றை நடத்துவாரென்று தெரிவிக்கப்படுகிறது.

பிரிகேடியர் வீரசேகரா கொழும்பு செல்லு முன்னர் யாழ்நகரில் தங்கியிருந்த போது கடந்த 22-ந் திகதி தடை நீக்கப்பட்ட பொருட் களை வடபகுதிக்கு கொண்டு வருவது பற்றி விடுதலைப்புலி களுடன் ஆராய்ந்தார்.

இதைத் தொடர்ந்து இவ் விவகாரம் குறித்து அரசாங் கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த அவசரமாக 23-ந் திகதி புதன்கிழமை கொழும் புக்கு புறப்பட்டார்.

கொழும்பில் அரசாங்கத்து டன் பேச்சு நடத்திவிட்டு மீண்டும் யாழ். வரும் அவர் இன்று முக்கியமான சந்திப் பொன்றை விடுதலைப் புலிகளு டன் நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சந்திப்பின் பின் விடுத லைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் ஏனைய யுத்தக்கைதி கள் தொடர்பான முடிவு வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

—வி-ரி

## பூநகரி பாதை விவகாரம்
## ஐ. நா. அதிகாரிகள்-புலிகள் செவ்வாய் சந்திப்பர்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பாதை ஊடாக யாழ். குடாநாட்டிற்கு உணவு வாகனங்களை அனுமதிப்பது பற்றி தமிழீழ விடுதலைப்புலி களுடன் மேலும் பேச்சுவார்த் தைகளை நடத்துவதற்காக அகதிகளுக்கான ஐ. நா. ஸ்தா பனத்தின் இரு அதிகாரிகள் எதிர்வரும் 29ம் திகதி செவ் வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

அகதிகளுக்கான ஐ. நா.

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரேமா மரணத்தின் பின் பத்திரிகை விற்பனை வீழ்ச்சி

(கொழும்பு)

முன்னுள் ஜனுதிபதி ஆர். பிரேமதாஸாவின் மரணத் துக்குப் பிறகு தென்பகுதியில் பத்திரிகைகளின் விற்பனையில் பெரும்வீழ்ச்சி ஏற்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## மண்ணெண்ணை முத்திரை 15 ரூபாவினுல் அதிகரிப்பு

(கொழும்பு)

வறிய மக்களுக்கு உதவும் பொருட்டு மண்ணெண்ணை முத்திரை 15 ரூபாவினுல் அதி கரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பு அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு வருமென்று புனர்வாழ்வு புனர்நிர்மான சமூக நல அமைச்சு அறிவித்துள்ளது.

(ரி)

## கடற்படையினரால் மீனவர்கள் தாக்குதல்

(நெல்லியடி)

கடலில் மீன்பிடிக்க சென்ற மீனவரை வழிமறித்த சிறி லங்கா கடற்படையினர் மீன வர்களை தாக்கியதுடன் ரூபா 2500 பெறுமதியான மீன்களையும் பறித்துச்சென்ற னர்.

இச்சம்பவம் நேற்று அதி காலை 5 மணியளவில் பருத் தித்துறை முனைக்கடலில் நடைபெற்றது.

இச்சம்பவத்தில் கடற்படை யால் தாக்கப்பட்ட வைர முத்து இராசா (வயது-28)

(3-ம் பக்கம் பார்க்க)

## பரசூட் பயிற்சி பெற்ற 28 இராணுவத்தினர்

(கொழும்பு)

கனேமுல்ல இராணுவ பயிற்சி பாடசாலையில் 28 இராணுவத்தினர் பரசூட் பயிற்சியைமுடித்துக் கொண்டு வெளியேறியுள்ளனர்.

இவர்களது அணிவகுப்பு இரத்மலானை விமான நிலையத் தில் அண்மையில் நடைபெற் றது.

கெமுனு, சிங்க ஆகிய கொமாண்டோ பிரிவுகளிலும் விசேட அதிரடிப்படையிலி ருந்து தெரிவு செய்யப்பட்ட வர்களுமே இந்த பரசூட் பயிற்சி பெற்றனர்.

அணிவகுப்பு மரியாதையின் பின்னர் இவர்களுக்கு விருது வழங்கும் வைபவமும் இடம் பெற்றது.

(ரி)

## தி.மு.க. விரைவில் பிளவுபடும் ஆபத்து உருவாகிவிட்டது?

(சென்னை)

திராவிட முன்னேற்றக்கழ கத்தில் பெரும் பிளவு ஏற் படும் அபாயம் உருவாகி வரு வதாக செய்திகள் தெரிவிக் கின்றன.

தி. மு. கவின் தலைவர் பதவியில் மாற்றம் வேண்டு மென தி. மு. க. இளைஞர் கள் விரும்புகின்றனர். இவர் கள் திரு. வை. கோபால சாமியை தலைவராக நியமிப்ப தற்கு திரைமறைவில் செயல் பட்டு வருவதாகக் கூறப்படு கிறது.

மக்கள் எம்மை விரும்பாத

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் புதிய ராணுவ தளபதி

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய இரா ணுவத் தளபதியாக லெப். ஜெனரல் வி. சி. ஜோஸி நிய மிக்கப்பட்டுள்ளார். இவர் தமது புதிய பதவியை அடுத்த மாதம் முதலாம் திகதிமுதல் ஏற்றுக்கொள்கிறார். (வி)

## மட்டு. பாடசாலைகளை புனரமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

கிழக்குமாகாணத்தில் இரா ணுவ நடவடிக்கையினுல் சேத மடைந்த பாடசாலைகளை புன ரமைப்பு செய்யவும் புதிய பாடசாலைகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

## மீளக் குடியமர்தலின்போது தனிச் சிங்கள குடியேற்றம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பில் மீளக் குடியமர்த்தல் என்ற போர் வையில் தனிச்சிங்கள குடி யேற்றங்களை மேற்கொள்ள சிறிலங்கா அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

மட்டு. மாவட்டத்திலுள்ள ஊகம், போக்காவெளி ஆகிய பகுதிகளில் தமிழ் மக் கள் 1990ம் ஆண்டு நடை பெற்ற இராணுவ நடவடிக் கையின் போது விரட்டப்பட் டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் சுரேகா புத்தக களஞ்சியம், 25, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-3206)

பல்கலைக்கழக இரண்டாம் வருட அரசறிவியல் மாணவர்களுக்கு பொது ஆட்சி இயல் நூல் வெளிவந்துள்ளது. ரூ 80-00 கிடைக்குமிடம் ஸ்ரீ காந்தா புத்தகசாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (சி-254)

வயலின் விற்பனைக்குண்டு (செக்கோசெலவாக்கியா) பியானோ உட்பட சகல இசைக் கருவிகளும் திருத்துபவர். தொடர்பு: பிரதான வீதி, மானிப்பாய். (அன்னம்மாள் தேவாலயத்திற்கு அருகாமை) (சி-262)

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsule கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-111)

— பெயர் மாற்றம் —
யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்
G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 252)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மேற்கு (தென்மூலை) புனித சூசையப்பர் ஆலய பங்குத்தந்தை அருள் திரு பேனுட் றெக்னோவிற்கு தென்மூலை மக்களால் பாராட்டு விழா பிரியாவிடை வைபவம் அண்மையில் நடாத்தப்பட்டது.

அச்சுவேலி புனித திரேசா பாடசாலை அதிபர் எத்தல் லீலா, செல்வி மரியதாஸ் வதனி, அருட்செல்வி மங்கைமலர் ஆகியோர் உட்பட பலர் இவ்விழாவில் பங்கு பற்றினர். (அ)

## 50 குடும்பங்களுக்கு ஆடுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 50 குடும்பங்களை தெரிவு செய்து சமூக மேம்பாட்டுத் திட்டமாக அவர்களுக்கு ஆடு வளர்ப்புத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்தி வருகிறது.

இத்திட்டமானது கிளிநொச்சி தெற்கில் செல்வா நகர் கிராமத்திலும், கிளிநொச்சி மேற்கில் ஊற்றுப்புலம், எள்ளுக்காடு ஆகிய கிராமங்களிலும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் முன்னோடி நடவடிக்கையாக ஊற்றுப்புலம் கிராமத்தைச் சேர்ந்த இருபது பயனாளிகளுக்கு கடந்த 19ம் திகதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் சார்பாக ஆடுகள் வழங்கப்பட்டன. (சி)

## விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை ஆதன வரி அதிகரிப்பு குறித்து ஆட்சேபனை தெரிவித்த ஆயிரத்திற்கும்மேற்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான விசாரணை 05-07-93லிருந்துயாழ் மாநகரசபை அலுவலகத்தில், வட்டார ரீதியாக மேற்கொள்ளப்படும்.

அரச விலைமதிப்பாளர் மற்றும் மாநகரசபை ஆணையாளரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் இணைந்து, மீளாய்வு செய்து விண்ணப்பதாரிகள் நேரில் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுவார்கள். (162-சி)

## அதிபர் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவாலி ஸ்டேசன் பாடசாலை பாதுகாப்பு கருதி நவாலி தொத்தணி அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் போடப்பட்ட எல்லைவேலி இனம் தெரியாத நபர்களால் பிடுங்கி எறியப்பட்டதோடு கதிரைகளும் அப்புறப்படுத்த பட்டுள்ளதாக இப்பாடசாலை அதிபர் புகார் செய்துள்ளார் விளையாட்டு மைதானத்துக்குப் பாதுகாப்பாக இந்த எல்லைவேலி போடப்பட்டிருந்தது. (162)

## டிப்ளோமா பரீட்சை

(மானிப்பாய்)

வவுனியா தாண்டிக்குளம் விவசாயக் கல்லூரியினால் விவசாய டிப்ளோமா அனுமதிக்கான போட்டிப் பரீட்சைக்கு யாழ்ப்பாணம், கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்குரிய பரீட்சை எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி நடைபெறும். சகல விண்ணப்பங்களும் ஆகஸ்ட் 20ம் திகதிக்குமுன்னர் அனுப்பி வைக்குமாறும் இதுசம்பந்தமான முழுவிபரமும் 25-7-93ம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (71)

## இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளம் கலைஞர் மன்றத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சி சட்டநாதர் வீதியில் உள்ள மன்றக்கலை மண்டபத்தில் நாளை 27ம் திகதிஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறஉள்ளது

செல்வி சாந்தினி சஞ்சீவராசா, செல்வி உஷா பரமரட்சகபாலன் ஆகியோரின் வயலின் இசைக்கச்சேரியும், திருமதி ஞானகுமாரி சிவகணேசனின் பாட்டுக்கச்சேரியும் செல்வி மைதிலி அம்பலவாணரின் பரதநாட்டியமும் இடம் பெறுகின்றது.

பிரதம விருந்தினராக கலாநிதி சோ. கிருஷ்ணராசா கலந்து கொள்வார். (சு)

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## மாகாணசபை வழக்கு தடை உத்தரவு நீடிப்பு

(கொழும்பு)

தென் மாகாண வட மேல் மாகாண சபைகளில் ஐ. தே. கட்சி முதலமைச்சர்களை நியமித்தது சம்பந்தமாக எதிர்க்கட்சிகளால் தொடுக்கப்பட்ட வழக்கில் ஏற்கனவே வழங்கப்பட்ட இடைநிறுத்த தடை உத்தரவை நீதிபதி மேலும் நீடித்துள்ளார்.

இதனால் இந்த இரண்டு மாகாண சபைகளும் இயங்க முடியாத நிலையில் உள்ளன. (சு-சி)

## விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

நடாத்தும்

## கரும்புலிகள் நாளையொட்டிய

### அரங்க மற்றும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்

05 . 07 . 1993 அன்று நடைபெறவிருக்கும் 'கரும்புலிகள்' நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும் அரங்கப் போட்டிகளினதும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளினதும் கோட்ட மட்டத் தேர்வுக்கான விபரங்களைக் குறிப்பிடுகின்றோம். இத்தேர்வின் பின்னர் மாவட்ட மட்டத்திலான தேர்வு நடைபெறும்.

### கோட்ட மட்டத்திலான தேர்வுகள் நடைபெறும் இடமும் காலமும்

| கோட்டம் | இடம் | காலம் |
|---|---|---|
| தீவகம் வலிகாமம் | இணுவில் மத்திய கல்லூரி | 26, 27. 06. 1993. காலை 10.00 மணி. |
| வடமராட்சி | வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை | 28, 29, 06. 1993. பி. ப. 3.00 மணி. |
| தென்மராட்சி | இந்துக் கல்லூரி சாவகச்சேரி | 29, 30. 06 1993 பி. ப. 3 00 மணி. |

மேற்குறிப்பிட்ட திகதிகளில் விண்ணப்பிக்கப்பட்ட நாடகங்களும் பாரம்பரிய விளையாட்டுகளில் கோலாட்டம், சரகம், ஆட்டக்காவடி, கும்மி என்பனவும் நடைபெறும்.

கிளித்தட்டு நிகழ்ச்சி கீழ்க் குறிப்பிடப்படும் விபரத்தின்படி நடைபெறும்.

| கோட்டம் | இடம் | காலம் |
|---|---|---|
| தென்மராட்சி | மின்ஒளி விளையாட்டுக் கழகம், கைதடி | 27, 28, 29, 30, 06. 93 பி. ப. 3-00 மணி |
| தீவகம் | சாம்சன் குடியேற்றம் அல்லைப்பிட்டி | 29, 30, 06. 93 பி. ப. 3-00 மணி |
| வடமராட்சி | நெல்லியடிமத்திய மகாவித்தியாலயம் நெல்லியடி | 26, 27, 06. 93 |
| வலிகாமம் | கலைமகள் நந்தன் விளையாட்டுக் கழகம் - சண்டிலிப்பாய்<br>அலிஸ்ரன் விளையாட்டுக் கழகம் - உடுவில்<br>ஐயனார் விளையாட்டுக் கழகம் சுன்னாகம்.<br>திருமகள் விளையாட்டுக் கழகம் அரியாலை.<br>காந்திஜி விளையாட்டுக் கழகம் அரியாலை<br>சைவப்பிரகாச வித்தியாலயம் சங்கானை<br>ஐக்கிய விளையாட்டுக் கழகம் நீர்வேலி | 25, 26, 27. 28. 06. 93 பி. ப. 3-00 மணி |

சீனடி சிலம்படி, போர்த்தேங்காய் உடைத்தல் இரண்டு நிகழ்ச்சிகளும் மாவட்ட மட்டத்திலான ஒரே நிகழ்ச்சியாக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் 1-7-93 அன்று நடைபெறும்.

குறிப்பிட்ட நேரத்துக்கு நிகழ்ச்சியாளர்கள் சமுகம் அளித்தல்வேண்டும்' அறிவிக்கப்பட்டுள்ள நேரத்துக்கு நிகழ்ச்சியாளர்கள் அந்தந்த நிலையங்களில் எம்மால் வழங்கப்படும் இலக்கங்களைப் பெற்று மண்டபத்தில் பதிவுசெய்துகொள்ளவேண்டும். பதிவு செய்யப்படாதவர்கள் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கோண்டாவில்
தமிழீழம்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம்,
நடுவப்பணியகம். (எ-3210)


## "சன் பிறண்ட்"

### இனிப்பு - ரொபி தயாரிப்புகள்

அளவெட்டி அளவை
கொன்பக்ஷனறிவேக்ஸ்
தயாரிப்புகளான
'சன்பிறண்ட்' இனிப்பு-ரொபி
வகைகள் சிறிது கால இடைவெளிக்குப்பின் மீண்டும் கீழ்க் காணும் விலாசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது விற்பனையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

நன்றிகள்

அளவை கொன்பக்ஷனறிவேக்ஸ்
பரமானந்தம் மில் கட்டடம்
தாவடி-மானிப்பாய் வீதி,
தாவடி-கொக்குவில்.
(சி-263)

# படையினருடன் ஆலோசித்து

## கிழக்கில் வாக்கெடுப்பு நடத்தலாம்

### - அமைச்சர் மல்லிமாராச்சி -

(கொழும்பு)

"வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டுமாயின் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவே வேண்டும்."

நாடாளுமன்ற தெரிவுக் குழு தற்போது சர்வஜன வாக்கெடுப்பு பற்றி பிரஸ்தாபித்திருப்பது குறித்து உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராச்சியின் கருத்தை கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது: 1988ம் ஆண்டு மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டவர்கள் சர்வஜன வாக்கெடுப்பை ஆதரித்திருந்தனர். ஆகவே சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது சரியாகும்.

வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஏன் கிழக்கில் மாத்திரம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென அவரை கேட்ட போது, அவர் தெரிவிக்கையில், வடக்கில் தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை இப்போது இல்லை. அங்கு சண்டை நடைபெறுகிறது. ஆனால் கிழக்கில் வடக்குடன் ஒப்பிட்டால் நிலைமை நன்றாகவே உள்ளது. எனினும் இதுபற்றி பாதுகாப்பு படையினருடன் கலந்தாலோசித்தே எதையும் செய்யவேண்டும் அத்தோடு தேர்தல் அங்கு நடைபெறுமானால் நீதியாகவும் நேர்மையாகவும் தேர்தலை நடத்த உறுதிப்படுத்தப்படவேண்டும். -கே-சி

கிழக்கு மாகாணத்தில் உள்ளவர்கள் இணைப்பை ஆதரிக்கமாட்டார்கள் ஏனெனில் கிழக்கு மாகாண சூழலும் நிலைமையும் வடக்கு மாகாணத்திலும் பல்வேறு வழிகளில் வேறுபட்டே காணக்கூடியதாக உள்ளது என்றார். (கே-சி

# இலங்கையில் அதிகார மாற்றம்

## அமைதியாக நடைபெற்றது

### அமெரிக்க உப ஜனாதிபதி பாராட்டு

(வாஷிங்டன்)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டபின் இலங்கை அரசியலில் நடைபெற்ற அதிகார மாற்றங்கள் மிக அமைதியாக நடைபெற்றது பாராட்டத்தக்கது என அமெரிக்க உபஜனாதிபதி அல்போ தெரிவித்தார்.

அமெரிக்காவில் வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு நடைபெற்ற விருந்துபசார வைபவம் ஒன்றில் அமெரிக்க உப-ஜனாதிபதி மேலும் பேசுகையில்: முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா மறைந்த பின் புதிய ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா புதிய பிரதமரையும் புதிய சபை முதல்வரையும் மற்றும் உயர் அதிகாரிகளையும் மிக அமைதியான முறையில் நியமனம் செய்தது இலங்கை அரசியலில் முதிர்ச்சி அடைந்துவருவதையேகாட்டுகிறது.

மேற்படி அதிகார மாற்றங்களை இலங்கை அரசு செய்வதற்கு காலதாமதம் எடுத்திருந்திருந்தால் நாட்டில் ஒரு நெருக்கடியான கட்டத்தை அரசு எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என்றும் அவர் கூறினார். (வி)

# ரயில்வே ஊழியர் சட்டப்படி வேலை!

(கொழும்பு)

ரயில்வே பகுதி ஊழியர்கள் சட்டப்படிவேலைசெய்யும் இயக்கத்தை கடந்தவாரம் முதல் ஆரம்பித்துள்ளதால் ரயில் சேவைகள் சீர்குலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

புகையிரதப்பகுதி அதிகார சபையாக மாற்றப்பட இருப்பதனால் ஊழியர்களின் எதிர் காலம் பற்றி விளக்கமாக தெரிவிக்கப்படாததை எதிர்த்தே இந்த சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை ஆரம்பித்திருப்பதாக ரயில்வே தொழிற்சங்க பிரதிநிதி தெரிவித்தார். 35க்கும் மேற்பட்ட ரயில்வேப்பகுதி தொழிற் சங்கங்கள் இந்த சட்டப்படி வேலைசெய்யும் இயக்கத்தில் இறங்கியுள்ளன. (வி-சி)

# இன்று

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லைசபாபதி அருள்மிகு சிவகாமி அம்பாள் கோவில் இன்று அதிகாலை ஆனி உத்தர திருவிழா இடம்பெறுகிறது தொடர்ந்து ஆருத்திரா தரிசனத்துடன் வெளிவீதிஉலா இடம்பெறும்.

0 0 0

(கொழும்புத்துறை)

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமான் ஆலயத்தில் ஆனி உத்தரம் பூசை வழிபாடு இன்று சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு நாகதம்பிரான் பொங்கல் விசேட அபிஷேகம் பூசை, ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும். (154)

0 0 0

(கொழும்புத்துறை)

தொல்புரம் கொட்டகுப்பம் பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை மாலை 5-00 மணிக்கு ஆனி உத்தரம் நாகதம்பிரான் பொங்கல், விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் அ. மி. த. க. பாடசாலையின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மதிலை உடலாளர் போட்டி இன்று 26ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நாகர்கோவில் வெண்மதிவிளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (161)

0 0 0

(யாழ்ப்பாணம்)

கார்மல் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை மு. ப. 8-30 மணியளவில் யாழ். புனித திரேசா தேவாலய மைதானத்தில் நடைபெறும் அருட்தந்தை பி. எ. தவராசசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (162)

0 0 0

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன் கோவில் ஆனி உத்தர தரிசனம் இன்று சனிக்கிழமை அதிகாலை 4-00 மணிக்கு நடேசப் பெருமானுக்கு விசேட அபிஷேகமும், 7 மணிக்கு நடராஜப் பெருமான் வெளிவீதி உலா வருதலும் நடைபெறும்.

# நாஞ்சில் மனோகரன் தி.மு.கவிலிருந்து நீக்கம்

(சென்னை)

திராவிட முன்னேற்றக்கழகத்தில் இருந்து நாஞ்சில் மனோகரன்நீக்கப்பட்டுள்ளார்.

இந்தத்தகவலை கட்சியின் பொது செயலாளர் க. அன்பழகன் தெரிவித்துள்ளார். கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதற்கு இவர் துணைப்பொதுச் செயலாளர் உறுப்பினர் பதவியில் இருந்தும் அகற்றப்பட்டுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நாஞ்சில் மனோகரனுக்குப் பதிலாக ஆற்காடு வீரசாமி துணைப்பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் தி.மு.க.விலிருந்து தம்மை நீக்கியது சட்டவிரோதமானது என்றும் தமது நிலையை விளக்க தமக்கு வாய்ப்பளிக்கவில்லை யென்றும் தம்மைப் பதவியில் இருந்து நீக்கும் அதிகாரம் பொதுச் சபைக்கு உண்டென்றும் நாஞ்சில் மனோகரன் தெரிவித்துள்ளார். (சு)

## கடலில் வீழ்ந்து மரணம்

(நெல்லியடி)

மட்டக்களப்பிலிருந்து வந்து ஆலங்கேணியூடாக கிளாலி கடற்பரப்பில் படகில் பயணம் செய்த நடுத்தர வயோதிபர் தவறுதலாக படகிலிருந்து கடலில் வீழ்ந்து மரணமானார்.

இச்சம்பவம் கடந்த 21ம் திகதி இரவு 10-30 மணியளவில் இடம் பெற்றது. (160-ரி)

ராவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் நாலாயிரம் பேர் வரையில் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஊர்வலத்தினரைத் தடுத்து பொலிசார் நடவடிக்கை எடுத்ததாகவும் ஊர்வலத்தில் கலந்துகொண்ட பலர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)

கடற்படையினரால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ராஜன் (வயது-22) ஆகியோர் இதுபற்றி தெரிவிக்கையில் வியாபார நோக்குடன் தாம் கடலில் மீன்பிடிக்கச் சென்றதாகவும் எதிர்பாராத விதமாக திடீரென கடலில் வந்த ஸ்ரீலங்கா கடற்படையின் விசைப்படகில் வந்த கடற்படையினர் தம்மை வழிமறித்தனரென்றும், தம்மை பலமாக காலினால் உதைத்ததுடன் விடுதலைப் புலிகளுக்கு மீனா? வியாபாரத்துக்கா எனக் கேட்டு தமது படகினையும் சேதமாக்கிவிட்டு, அவர்களது விசைப்படகுடன் இணைத்து தமது படகினையும் இழுத்துச் சென்றதுடன் ரூபா 2500பெறுமதியான மீன்களையும் பறித்துச்சென்றனரெனவும் தெரிவித்தனர். (160-ரி)

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

வசந்தபுரம் அண்ணா சனசமூக நிலையத்தால் நடாத்தப்பட்டுவரும் 'தியாகி திலீபன்' சிறுவர் பாடசாலை மாணவர்களுக்கு இன்று பி.ப. 3மணிக்கு பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. (162)

## இராசி பலன்

26-06-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு ஆனி 12)

ஸப்தமி மாலை 6-59 வரை, உத்தரம் பி. இ. 3-17 வரை இராகு காலம் 8-55 முதல் 10-25 வரை, சுபநேரம் பகல் 2-55 முதல் 4-25வரை, மரண யோகம்.

மேடம்: இனிய விருந்து, அறிஞர் சந்திப்பு, புகழ்.

இடபம்: கண்டிப்பு, மனக் கவலை, தொழில் பிரிவு.

மிதுனம்: அதிக வேலைப் பளு, மனப்புழுக்கம், செலவு.

கடகம்: தொழில் சிறப்பு, தந்தையார் ஆசி, பயணம்.

சிம்மம்: அடி பணிதல் சகோதர பகை, காரியதடை.

கன்னி: மகிழ்ச்சி தரும் சம்பவம், குடும்பசுகம், விருந்தினர் வருகை.

துலாம்; பணத் தகராறு, மனைவியின் துயர், வெறுப்பு.

விருச்சிகம்: காரிய பலிதம், நற்செய்தி, விவாதம்.

தனுசு: கெட்ட சகவாசம், கூடி உறவாடல், புத்திரர் பெருமை.

மகரம்: முறுகல் நிலை, தொழில் நஷ்டம், யோசனை.

கும்பம்: எதிர்கள்தொல்லை, பணமுடை, அச்சம்.

மீனம்: சுபகாரிய செலவு, உறவினர் உதவி, வாக்கு வன்மை.

- ஜோதிடர்

# "வர்த்தக ஊழியரின் எதிர்காலம் பாதிப்பு"

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் தற்பொழுது குறைந்த சம்பளம் பெற்று வரும் வர்த்தக ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். இவர்களை நம்பியிருக்கும் குடும்பங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். நாட்டு நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு வர்த்தகர்கள் சேமலாபநிதி, நம்பிக்கை நிதியம் ஆகியவற்றைச் செலுத்தாது விடுகின்றார்கள். இதனால் வர்த்தக ஊழியர்களின் எதிர் காலம் பாதிப்புக்குள்ளாகும் நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறு யாழ். வர்த்தக ஊழியர் சங்கத் தலைவர் திரு. என். இராமச்சந்திரன் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் அவ்வறிக்கை மேலும் கூறுகையில்:-

அரசாங்கம்வெளியிட்டசுற்று நிருபத்தின்படி தனியார்துறை ஊழியர்களுக்கு 15 வீத சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற அறிவித்தலின் படி சகல வர்த்தக ஊழியர்களுக்குப் 300 ரூபா சம்பள உயர்வு மாதம் கிடைக்க வேண்டும். இன்றைய நிலையில் ஒருவருடம் சேவையை முடித்த சகல வர்த்தக ஊழியர்களுக்கும் (ஆண் - பெண்) சம்பளமாக 2300 ரூபா மாதம் வழங்க வேண்டும். (சி)


அகில இலங்கை

இளங் கலைஞர் மன்றம்

மாதாந்த இசைநிகழ்ச்சி

"போஸ்கோ ஸ்தாபனம்"
3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ஆதரவில்

இடம்: மன்றக் கலாமண்டபம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 27-6 1993 ஞாயிறு மாலை 5-00 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 5-00—5-45 வயலின் இசை
செல்வி உஷா பரராசசேகரன் — வயலின்
செல்வி: சாந்தினி சஞ்சீவராசா — வயலின்
திரு. க. கண்ணதாசன் — மிருதங்கம்

5-45—6-45 இசைக் கச்சேரி
திருமதி ஞானகுமாரி சிவநேசன் — பாட்டு
செல்வன் எஸ். கோபிதாஸ் — வயலின்
திரு. எஸ். மகேந்திரன் — மிருதங்கம்
திரு. எஸ். துரைராசா — கெஞ்சிரா

6-45 — 7-15 மங்கள விளக்கேற்றல்
1. திரு. ஆ. பஞ்சாட்சரலிங்கம்
உரிமையாளர்: கமலேஸ்வரி வர்த்தக நிலையம், யாழ்ப்பாணம்.
2. திரு சு. தனபாலசிங்கம்
உரிமையாளர்: ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி.

தலைமையுரை:
அருட்திரு. அ. இ. பேனாட்
(அதிபர், யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி.)

பிரதம விருந்தினர் உரை:
கலாநிதி சோ, கிருஷ்ணராஜா
(தலைவர், மெய்யியற்துறை யாழ். பல்கலைக்கழகம்)

7-45 — 8-45 சிறப்பு நிகழ்ச்சி; பரதநாட்டியம்
நாட்டியக் கலைமணி பரத கலாவித்தகர்
செல்வி மைதிலி அம்பலவாணர்
நட்டுவாங்கம்: திருமதி சாந்தி ரவீந்திரன்
பாட்டு: திரு. வீணை இராமேஸ்வரன்
மிருதங்கம்: திரு. கே. கண்ணதாசன்
வயலின்: திரு ஆர் எஸ். கேசவமூர்த்தி

இசை ஆர்வலர்கள். அபிமானிகள்
அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-264) மேற்படி மன்றத்தினர்.

# வியன்னாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாடு தோல்வியில் முடிவுற்றது?

(வியன்னா)

வியன்னாவில் கடந்த இரு வாரங்களாக நடைபெற்ற உலக மனித உரிமைகள் மாநாடு நேற்று முடிவடைந்தது.

160 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இம் மாநாட்டில் மேற்குலக நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் ஆசிய அரபு நாடுகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் மிக காரசாரமான விவாதங்கள் நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பேச்சுச் சுதந்திரம், சித்திரவதை செய்யப்படாமை போன்றவை உலகில் அனைத்து நாடுகளிலும் சமமாகக் கணிக்கப்படவேண்டும் என்று மேற்குலக நாடுகளின் பிரதிநிதிகள் வாதிட்டார்கள். அது தவறு என்றும் ஒவ்வொரு நாடுகளிலும் நிலவிவரும் பிரச்சினைகளின் அடிப்படையில் வைத்தே மனித உரிமை மீறல் செயல்கள் கணிக்கப்படவேண்டும் என்று ஆசிய அரபு நாடுகளின் பிரதிநிதிகள் வாதிட்டனர்.

மனித அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க ஐ. நா. சபையில் புதிதாக பிரதிநிதி ஒருவரை நியமிப்பது சம்பந்தமாக ஒரு தீர்க்கமான முடிவும் எடுக்காமல் இந்த மாநாடு முடிவடைந்துள்ளது.

மாநாட்டின் அறிக்கையை தயாரிப்பதில் கூடிய நேரத்தை செலவு செய்த இந்த மாநாட்டின் அறிக்கையால் எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை என்று கூறப்படுவதாக பி. பி. ஸி. நேற்று தெரிவித்தது. (வி)

# அமைச்சர் சிறிசேன கூரே வெளிநாடு பயணமானர்

(கொழும்பு)

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே வெளிநாடு பயணமானர்.

அண்மையில் பிலிப்பைன்ஸில் நடைபெற்ற ... ஐ. தே. கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவை அம்பலத்துக்குக்கொண்டுவந்தார்.

ஐ. தே. கட்சியின் பொதுச் செயலாளரான இவர் பிரிட்டன், நெதர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் உத்தியோகப்பற்றற்ற பயணமொன்றை மேற்கொண்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் நாடுதிரும்பும்வரை பதில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக சந்திரா ரணதுங்க நேற்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார். —இ

# டிக்கெட் இன்றி பயணம்செய்த ரெயில் பயணிகளிடமிருந்து 4 கோடி ரூபா அறவீடு

(புதுடில்லி)

இந்தியாவில் இவ்வருடம் இதுவரை ரயில்களில் டிக்கட் இல்லாமல் பயணம்செய்தவர்களிடமிருந்து 4 கோடியே 10 லட்சம் ரூபாவை அதிகாரிகள் அபராதமாக பெற்றுள்ளார்கள். ரயில்களில் டிக்கெட் இல்லாமல் பயணம்செய்த 3 லட்சத்து 12 ஆயிரம் பேரை ரயில்வே அதிகாரிகள் கைது செய்து மேற்படி தொகையை இவர்களிடமிருந்து பெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

# தற்காலிக ஊழியருக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

1992ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 1ம் திகதி அரசசேவையின் கீழ் மட்டத்தில் சேர்க்கப்பட்ட சமயா சமய, தற்காலிக பாடசாலை சேவை ஊழியர்களுக்கு இவ்வருடம் மே மாதம் 1ம் திகதி தொடக்கம் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று பொதுநிர்வாக அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

இந்த ஊழியர்கள் வெற்றிடமுள்ள நிரந்தர பதவிகளில் ஒன்றில் தொடர்ச்சியாக சேவையாற்றியிருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை இவர்கள் கொண்டிருத்தல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# ஜனதாதள் கட்சியிலிருந்து நடிகர் சிவாஜி ராஜினமா

(கொழும்பு)

நடிகர் திரு. சிவாஜிகணேசன் தமிழ்நாடு ஜனதாதள் கட்சித் தலைவர் பதவியையும், கட்சியின் ஆயுட்கால உறுப்பினர் பதவியையும் நேற்று ராஜினமாச் செய்தார்.

தமிழ்நாடு ஜனதாதள் கட்சிக்கான தேர்தலை காரணமின்றி ஒத்திவைத்துள்ளதை ஆட்சேபித்தே தான் கட்சியிலிருந்து விலகுவதாக திரு. சிவாஜிகணேசன் கட்சித்தலைவர் திரு. எஸ். ஆர். பொம்மைக்கு எழுதிய தமது ராஜினமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. சிவாஜிகணேசனுடன் கட்சி உறுப்பினர்களான செங்காளியப்பனும், திரு. இப்பை யாவும் ராஜினமாச் செய்துள்ளார்கள். (வி-மீ)

# யாழ். வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரதான மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீரிழிவு, அமுக்க வியாதி, இருதயநோய், வலிப்பு நோய், புற்றுநோய் போன்றவற்றுக்கு மருந்துகளுக்கும், உயிர்காப்பு மருந்துகளும் தட்டுப்பாடு நிலவுகிறது.

புற்றுநோய், வலிப்பு நோய் ஆகியவற்றுக்கான மருந்துகள் எதுவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. அந்த நோயினால் அவதிப்படுபவர்கள் தனியார் மருந்துக்கடைகளில் அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரிட்டிஷ் நிறுவனம் வழங்கிய இரண்டு ஜெனரேட்டர்கள் இன்னமும் யாழ்ப்பாணம் வந்துசேரவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது. —சு-இ

# யாழ். மாவட்ட இளைஞருக்கு மீன்பிடி தொழில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இளைஞர்களுக்கு மீன்பிடித்துறையில் குறுகிய காலப் பயிற்சியை வழங்குவதற்கு கடல் தொழில் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள மீன்பிடிச்சங்கங்களினால் தெரிவு செய்யப்படும் இளைஞர்களுக்கு இந்த குறுகிய மீன்பிடிப் பயிற்சி அளிக்கப்பட இருப்பதாக யாழ். நகரிலுள்ள கடல் தொழில் அமைச்சின் பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. எம். பிரான்சிஸ் தெரிவித்தார்.

இப்பயிற்சிகள் ஆவணி மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும், பயிற்சிகள் கட்டம்கட்டமாக நடாத்தப்படுமென்றும், பயிற்சிகள் முடித்துக்கொண்டு வெளியேறும் இளைஞர்களுக்கு கடல் தொழில் ஈடுபடுவதற்காக நாணயவிடைகள் மூலம் கடன் வழங்குவதற்கும் அமைச்சு திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். —வி-ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூன் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Po;s office, Sri Lanka under Licence Number B/10336/B

## மீளக்குடியமர்தலின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பொழுது அங்கு மீளக் குடியமர்த்தல் நடவடிக்கை எனக்கூறி சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும், மட்டு. மாவட்ட முன்னாள் ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இதே போன்று மட்டு கல்குடாப்பகுதியில் சிங்கள மீனவர் குடியேற்றங்களை மட்டும் குடியேற்றி அவர்களை பாதுகாப்பதற்கென தனியான இராணுவ முகாம் ஒன்றை அமைப்பது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

கல்குடா பகுதியில் இவ்வாறு சிங்கள மீனவர் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான முன்னேற்பாடு நடவடிக்கைகளை மட்டு. இராணுவ இணைப்பதிகாரிரெருகான் குணவர்த்தன, பிரிகேடியர் லக்கி அல்கம உட்பட பல படை அதிகாரிகளும் அரச அதிகாரிகளும் எடுத்து வருகின்றனர். (மீ)

## சோனியாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் ஹர்ஷத் மேத்தாவிடம் லஞ்சம் பெற்றதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அடுத்து இந்த நடவடிக்கை திரைமறைவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருமதி சோனியா காந்தியின் தனிச் செயலர் ஜோர்ஜ், மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங்கை தனியாகச் சந்தித்து இது தொடர்பாக பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது. சோனியாவிடமிருந்து அவர் ஒரு தகவலை அர்ஜுன் சிங்கிற்கு தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை மஹாராஷ்டிர முதல்வர் சரத்பவாரும், அர்ஜுன்சிங்கும் தனியே இரகசியமாகச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

அர்ஜுன்சிங்கின் வீட்டில் நடந்த இந்தச் சந்திப்பு ஒன்றேகால் மணித்தியாலங்கள் நடைபெற்றது. இவர்கள் என்ன பேசினர்கள் என்ற விபரங்கள் தெரிவிக்கப்படாவிட்டாலும் அரசியல் வட்டாரங்களில் இச்சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இதற்கு முன்னதாக குஜராத் முதல்வர் சிமென்ற்பாய் பட்டேல் அர்ஜுன்சிங்கைச் சந்தித்துப் பேசியதாக கூறப்படுகிறது. —ரி

# வீட்டுப் பொருட்கள் எரிந்து நாசம்

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி டச் வீதியில் உள்ள வீடொன்றில் சுமார் இரண்டு லட்ச ரூபா பெறுமதியான வீட்டுப் பொருள்கள் திடீரென எரிந்து நாசமாகியுள்ளன.

தையிட்டியிலிருந்து இடம்பெயர்ந்துவந்து இந்த வீட்டில் சுமார் ஒன்றரை வருடமாக தஞ்சமடைந்திருக்கும் ஆசிரியை செல்வி சத்தியேஸ்வரி சுப்பிரமணியம் என்பவரது வீட்டுப் பொருள்களே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது. வீட்டின் ஒரு பகுதியும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நடைபெற்ற மூன்று நாட்களுக்குமுன் வீட்டுக்கதவுப்பூட்டை ஒருகோஷ்டியினர் உடைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. 1'9)

## பூநகரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உயர் ஸ்தானிகராலய இலங்கைக்கான பதில் பிரதிநிதி காஸிம் ஊரிகான், பாதுகாப்பு அதிகாரி கலாநிதி பீற்றர் நிக்கலஸ் ஆகிய இருவருமே எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ். வருகை தரவுள்ளனர்.

28ம் திகதி திங்கட்கிழமை விமானம் மூலம் பலாலிக்கு வந்துசேரும் இவ்விரு அதிகாரிகளும் அப்பகுதியூடாக மறுநாள் முற்பகல் பருத்தித்துறையை வந்தடைவர். அன்றைய தினமே இவ்விரு அதிகாரிகளும் விடுதலைப் புலிகளுடன் பூநகரிப் பாதை ஊடாக உணவு வாகனங்களை அனுமதிப்பது பற்றி பேச்சு நடத்துவர்.

இப்பேச்சுக்களில் யு. என். எச். ஸி. ஆர். யாழ் வதிவிடப் பிரதிநிதி அசோக்குமாரும் பங்குபற்றுவார். இச்சந்திப்பை அடுத்து இம்மாதம் 30ம் திகதி கேரதீவு இறங்குதுறையையும் இவர்கள் பார்வையிடவுள்ளனர். (ரி)

## ராவ் லஞ்சம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பங்குத் தரகர் ஹர்ஷத் மேத்தா மீது விசாரணைகளை மேற்கொண்டபோது பிரதமர் நரசிம்மராவ் தம்மிடமிருந்து ஒரு கோடி ரூபாவை லஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு நான்கு நாட்கள் அவகாசம் கேட்டார்.

இதன் பேரில் கூட்டு நாடாளுமன்றக்குழு திரு. ஹர்ஷத் மேத்தாவுக்கு நான்கு நாள் அவகாசம் வழங்கியது.

இது சம்பந்தமான சாட்சிகளை தாம் நான்கு நாட்களுக்குள் ஆஜர் செய்வதாகவும் திரு. மேத்தா தெரிவித்தார்.

இதேவேளையில் பொலிசார் தம்மிடமிருந்து பறிமுதல் செய்த டயறிகள், கணக்குப் புத்தகங்கள் போன்ற ஆவணங்களைத் தமக்குத் தருமாறும் திரு. மேத்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த டயறிகளிலும் கணக்குப் புத்தகங்களிலும் இந்தியப் பிரதமர் தம்மிடம் ஒரு கோடி ரூபா லஞ்சம் பெற்றதற்கான தகுந்த ஆதாரங்கள் இருப்பதால் அவற்றைத் தமக்கு தருமாறும் திரு. மேத்தா பொலிசாரைக் கேட்டுள்ளார். (இ)

## தி. மு. க.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டிருந்தோம். இன்று மக்கள் எம்மை விரும்பும்போது நாம் பிளவுபட்டு நிற்கின்றோம் என்று மு. கருணாநிதி கூறியுள்ளார்.

தி மு. க. முன்னர் பலம் வாய்ந்த ஆலமரம்போல் இருந்தது. இன்று அந்த ஆலமரம் வேரோடு சாய்ந்து விட்டது. தி. மு. க. வுக்கு இனி யாராலும் புத்துயிர் ஊட்ட முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் திரு. நாஞ்சில் மனோகரனை கட்சியிலிருந்து விலக்கியதே தி. மு க. பிளவுபடுவதற்கு பெரும் காரணமாக அமைந்துவிட்டதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். —வி

## மட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது.

பாடசாலைகள் புனரமைப்பிற்காகவும் மற்றும் புதிய பாடசாலைகள் அமைப்பதற்காகவும் 10 கோடி ரூபா வரையில் புனர்வாழ்வு புனர்நிர்மாண சமூகநல அமைச்சால் செலவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்திலுள்ள பல பாடசாலைகள் இடிந்து வீழ்ந்துள்ளதுடன் பலத்த சேதமடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ரி)

## பிரேமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலபத்திரிகைகள் பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் அவருக்கு எதிரான செய்திகளை வெளியிட்டு வந்த அதனைப் படிப்பதற்கு பெருமளவு மக்கள் போட்டி போட்டுக்கொண்டு அந்தப் பத்திரிகைகளை வாங்கிப்படித்தனர்.

ஆனால் இன்று பிரேமதாஸா இல்லை. இதனால் பல பத்திரிகைகளின் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)